**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST(POA) ACT,COIMBATORE.

Spl.S.C.No.98 of 2023

Prosecution witness - 4

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-4 தங்கம்மாள் | Caste | |
| Father / Husband Name | பாரவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2024.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, வத்தலக்குண்டு, பெதனியா தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர். அ.சா.1 என்னுடைய மூத்த மகள் ஆவார். அ.சா.2 , அ.சா.1 ன் கணவர் ஆவார். அ.சா.3 என் மகன் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி இறந்து போன என் கடைசி மகள் பரமேஸ்வரியின் கணவர் ஆவார். என் கணவர் பெயர் பாரவேல், என் கணவர் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இறந்து போன என் மகள் பரமேஸ்வரி SMP மில்லில் வேலை செய்து வந்தார். அப்போது கொடைக்கானல் மன்னவனூரை சேர்ந்த சிவமுருகனுக்கும், எனது மகள் பரமேஸ்வரிக்கும் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு ஒரு மாதம் எங்கள் வீட்டில் தங்கி வசித்து வந்தார்கள். அதன்பிறகு கோயமுத்தூரில் சிவமுருகனின் நண்பர் ஆனந்தராஜ் என்பவர் தொலைபேசி மூலம் சிவமுருகனை வரவழைத்து கருமத்தம்பட்டி அருகிலுள்ள கௌரிசங்கர் ஹோட்டலில் வேலை வாங்கி தருவதாக சொல்லி வரவழைத்தார். அதன்பிறகு எனது மகள் பரமேஸ்வரியும், அவரது கணவர் சிவமுருகனும் வேலைக்காக கோவை கருமத்தம்பட்டி அருகிலுள்ள ஹோட்டலுக்கு சென்று வேலை செய்து வந்து,

அங்கு தனி வீடு எடுத்து வசித்து வருவதற்கு நான் என்னுடைய மகள் பரமேஸ்வரிக்கு 2 பவுன் நகை போட்டு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு 3 பவுன் நகையை நான் அடகு வைத்து என் மகளின் தனி வீட்டிற்கு முன்பணமாக ரூ.30000/- கொடுத்து அனுப்பினேன். அதன்பிறகு தனிவீட்டில் என் மகள் பரமேஸ்வரியும், ஆஜர் எதிரியும் வசித்து வந்தனர். அங்கு சென்றபிறகு எனது மகள் பரமேஸ்வரி வாரம் இரண்டு முறை எனக்கும், என் மகள் அ.சா.1, என் மகன் அ.சா.3 க்கும் தொலைபேசியில் அடிக்கடி பேசுவார். நாங்களும் நலம் விசாரிப்போம். அதன்பிறகு எனது மகள் பரமேஸ்வரி ஒரு நாள் அ.சா.1 க்கு போன் செய்து தான் கர்ப்பமாக இருக்கிறேன் என்று தகவல் சொன்னதாகவும், அதற்கு அ.சா.1 பார்த்து பத்திரமாக இரு என்று கூறியதாகவும் என்னிடம் அ.சா.1 கூறினார். 16.08.2017 அன்று ஆஜர் எதிரி என் மகன் அ.சா.3 முருகனுக்கு போன் செய்து உன் தங்கை பரமேஸ்வரி பைக்கிலிருந்து கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தகவல் சொன்னதாக என் மகன் என்னிடமும், அ.சா.1-டமும் தெரிவித்தார். உடனடியாக நானும், அ.சா.1 ம், அ.சா.2, அ.சா.3, என்னுடைய இன்னொரு மகள் சுமதி, மற்றும் உறவினர்கள் அனைவரும் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கு சென்று பார்த்தபோது எனது மகள் பரமேஸ்வரி இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். நாங்கள் விசாரித்தபோது எனது மகள் பரமேஸ்வரி பைக்கில் இருந்து கீழே விழுந்து அடிபட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக 17.08.2017 அன்று சூலூர் காவல் நிலையத்தில் எனது மகள் அ.சா.1 ஜோதி எழுத்து மூலமான புகார் ஒன்றை கொடுத்தார். அதனடிப்படையில் நாங்கள் பிரேதத்தை பெற்றுக் கொண்டு வத்தலகுண்டிற்கு கொண்டு சென்றுவிட்டோம். நாங்கள் வத்தலகுண்டிற்கு சென்று எங்கள் குலவழக்கப்படி எனது மகள் பரமேஸ்வரியை அடக்கம் செய்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>சாட்சி பிறழ்சாட்சியாக தோன்றுவதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது-</u>**

எனது மகள் பரமேஸ்வரியின் கணவர் சிவமுருகனின் பெற்றோர்கள் நாங்கள்

இந்து பறையர் வகுப்பை சார்ந்தவர்கள் என்று தெரிந்து திருமணம் செய்து கொண்டதில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை என்றும், அதனால் குழந்தை வேண்டாம் என்று கூறினார்கள் என்றும், கர்ப்பம் சமயத்தில் என் மகள் பரமேஸ்வரியின் கணவர் மாத்திரை கொடுத்து கருவை கலைத்துவிட்டார் என்றும், எனது மகள் பரமேஸ்வரி என்னிடம் சொல்லி அழுதார் என்றும், எனது மகள் பரமேஸ்வரியின் கணவர் சிவமுருகனுக்கு வேறு பெண் பார்க்கிறார்கள் என்று அவரது பெற்றோர்கள் கூறினார்கள் என்றும், ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் அடிக்கடி சாதி பெயரை சொல்லி திட்டி, அவமானப்படுத்துவார்கள் என்று என் மகள் பரமேஸ்வரி என்னிடம் போன் மூலம் தகவல் தெரிவித்தார் என்றும், நாங்கள் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தபோது என் மகள் பரமேஸ்வரி தலையில், கை, கால் போன்ற இடங்களில் இரத்த காயத்துடன் பிணமாக இறந்த நிலையில் கிடந்தார் என்றும், இது குறித்து ஆஜர் எதிரியிடம் என்ன நடந்தது என்று கேட்க ஆஜர் எதிரி 14.08.2017ம் தேதி தனது நண்பர்களுடன் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்ததாகவும், அது பரமேஸ்வரிக்கு பிடிக்காமல் எங்கள் இருவருக்கும் சண்டை ஏற்பட்டு இரண்டு நாட்களாக பேசிக்கொள்ளவில்லை என்றும், 16.08.2017 அன்று வேலை முடித்து 7.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது எங்கள் இருவருக்கும் மீண்டும் சண்டை ஏற்பட்டதாகவும், அன்று இரவு 9.00 மணிக்கு பரமேஸ்வரி வீட்டை விட்டு தனது அம்மா வீட்டிற்கு செல்வதாக கூறி வீட்டை விட்டு சென்றுவிட்டதாகவும், பிறகு ஆஜர் எதிரி தனது நண்பர் ஆனந்தராஜீடன் பரமேஸ்வரியை தேடி சென்றபோது கணியூர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தவரை இரவாகிவிட்டதால் நானே நாளை உன்னை உன் வீட்டில் கொண்டு போய்விடுகிறேன் என்று கூறி ஆஜர் எதிரி அழைத்து வந்தபோது பரமேஸ்வரி பைக்கில் இருந்து குதித்துவிட்டதாகவும் கூறினார் என்றும், உடனடியாக பரமேஸ்வரியை கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்ததாகவும் கூறினார் என்றும், ஆகவே என் மகள் பரமேஸ்வரி இறப்பில் சந்தேகம் இருக்கிறது என்றும், அதனால் ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் சாதி வித்தியாசம் பார்த்து என் மகள் பரமேஸ்வரியின் இறப்பில் மர்மத்தை ஏற்படுத்தி உள்ளனர் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு, எதிரி அரசியல், பொருளாதார செல்வாக்குடன் இருப்பதால் உண்மை சம்பவங்களை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை - இல்லை.**

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

(ஒம்) ஆர். நந்தினி தேவி, M.L.,DPM.,
அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்,
பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல்
பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள்
தடுப்பு சட்டம், கோயமுத்தூர்.